# அருப்புக்கோட்டை நகராட்சி

## விகாரி ஆண்டு மாசி மாதம் நாள் : 12.03.2020 வியாழக் கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :– திரு.P.அயூப்கான், B.Com., M.A., B.Ed., தனி அலுவலர்**

**பொருள் 1 :** ஆணையாளர் பிப்ரவரி – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.899**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளர் பிப்ரவரி – 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்பட்டது.

**தீர்மான எண்.900**

**பொருள் 3 :** இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு பொலிரோ ஈப்பு வாகன எண் TN67F9587 ல் ஏற்பட்டுள்ள பழுது பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.26,000/– யை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 912/2020/இ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.901**

**பொருள் 4 :** தூய்மை இந்தியா திட்டம் 2015–16ன் கீழ் 28.10.2015ல் நடைபெற்ற 2வது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு கீழ்கண்ட உபகரணங்களுடன் கூடிய குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் வாங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**இந்நகராட்சியில் உள்ள உபகரணங்கள் :**

1. Primary Section Feeder Chute of Capacity 0.5 $m^3$

2. Manufacture, Supply & Erection of Feeder Belt Conveyor, length of the Conveyor 11.5 meter, width of the Conveyor belt -800mm rubberized. The equipment will be supplied with a 3 HP 3 Phase, 1440rpm motor or higher gearbox and all necessary structural supports

3. Manufacture, Supply & Erection of Trommel with 100/75mm Dia screen holes length of the equipments 5 meter. Dia 1.3 meter or higher. The equipment will be supplied with a 7.5 HP, 3 phase, 1440 RPM motor or higher gearbox and all necessary structural supports.

4. Manufacture, supply & Erection of Trommel Reject Belt Conveyor, length of the conveyor 5 meter, width of the conveyor belt 500mm rubberized. The equipment will be supplied with a 3 HP, 3 Phase, 1440 RPM motor or higher gearbox, input chute, output chute and all necessary structural supports.

5. Manufacture, supply & erection of Trommel Accept Belt Conveyor, length of the conveyor-11 meter, width of the conveyor belt-500mm rubberized. The equipment will be supplied with a 3 HP, 3 phase, 1440 RPM motor, gearbox and all necessary structural supports.

6. Manufacture, Supply & Erection of Shredder machine with input capacity of 3 MT per Hour, The equipment will be supplied with a 10 HP, 3 Phase, 1440 RPM motor, or higher and all necessary structural supports

7. Manufacture, supply & erection of shredder output belt conveyor, length of the conveyor-5 meter, width of the conveyor belt-500 mm rubberized. The Equipment will be supplied with a 2 HP, 3 phase, 1440 RPM Motor or higher, gearbox and all necessary structural supports

8. Reifinement section feeder chute of capacity 0.25 m3
9. Manufacture, supply & Erection of Rotary Screen Feeder Belt conveyor, length of the conveyor-7.5 meter, width of the conveyor belt-500mm rubberized. The equipment will be supplied with a 3HP, 3 phase, 1440 RPM motor or higher, gearbox and all necessary structural supports

10. Manufacture, supply & erection of Rotary screen with 6mm dia screen hole size, length of equipment – 3.5m and 1m dia the equipment will be supplied with a 5HP, 3 phase, 1440RPM Motor or higher, gearbox and all necessary structural supports

11. Manufacture, supply & erection of Rotary screen output belt conveyor, length of the conveyor- meter, width of the conveyor belt – 500 mm rubberized. The equipment will be supplied with a 2 HP, 3 phase, 1440 RPM motor or higher, gearbox and all necessary structural supports

12. Contorl panel board with necessary cables & termination for handling the complete machinery power load

மேலும் தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் ரூ.316.00 இலட்சத்தில் 6 இடங்களில் நுண் உரக்கிடங்குகள் அமைக்கப்பட்டு அந்தந்த பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் அப்பகுதியில் உள்ள நுண் உரக்கிடங்குகளிலேயே உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருவாதால், ஏற்கனவே தூய்மை இந்தியா திட்டம் 2015–16ன் கீழ் நவீன கலவை உரக்கிடங்கு அமைத்தல் பணிக்காக கொள்முதல் செய்யப்பட்ட மேற்கண்ட உபகரணங்களுடன் கூடிய குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் (TROMMEL) தற்சமயம் உபயோகிக்காமல் பயனற்ற நிலையில் உள்ளதால் வேறு ஒரு நகராட்சிக்கோ அல்லது மாநகராட்சிக்கோ மாற்றம் செய்யுமாறு இவ்வலுவலக கடித ந.க.எண்.2979/2019/இ1 நாள் 28.01.2020 ம் தேதியிட்ட கடிதத்தில் கோரப்பட்டதின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1894/தி3/2020 நாள் 06.02.2020 அன்று வழங்கப்பட்ட ஆணையில் குப்பைகளை

தரம் பிரிக்கும் இயந்திரம் (TROMMEL) மற்றும் உபகரணங்களையும் நாகர்கோவில் மாநகராட்சிக்கு வழங்கவும், இயந்திரத்தினை பெற ஆகும் செலவினத்தொகையினை நாகர்கோவில் மாநகராட்சியே ஏற்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட குப்பைகளை தரம் பிரிக்கும் இயந்திரம் (TROMMEL) மற்றும் உபகரணங்களையும் நாகர்கோவில் மாநகராட்சிக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவினை ஏற்று மேற்படி இயந்திரத்தை நாகர்கோவில் மாநகராட்சிக்கு தற்காலிகமாக வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 2979/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.902**

பொருள் 5 : இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டியிருப்பதால், கடந்த 12.02.2020ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விபரப்படியான விலைப்புள்ளி விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி விலைப்புள்ளிகளில் Fancy Associates நிறுவனமானது குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளி விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | Fancy Associates | ரூ.4620/– |
| 2 | Almas Traders | ரூ.4665/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண் 1ல் உள்ள குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Fancy Associates நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5854/2019/எச்2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.903**

பொருள் 6 : அருப்புக்கோட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரியும் திரு.A.P.மோகன்குமார் என்பவர் 2014–15ம் ஆண்டில் மேற்கொண்ட தெற்கு ரத்தின சபாதிபுரம் தெருவில் மினிபவர் பம்ப் அமைக்கும் பணிக்கான வைப்புத்தொகை WHA 5% ரூ4530/–ஐ வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார் அன்னார் இப்பணியினை மேற்கொண்டு 5 வருடங்களுக்கு மேலாகிவிட்டபடியால் அன்னாரது வைப்புத்தொகை WHA 5 % ரூ.4530/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.8006/2019/பி3

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.904**

பொருள் 7 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு 14 CFC மத்திய நிதிக்குழு 2019–2020 ன் கீழ் வார்டு எண் 4 அன்பு நகர் 7வது தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.10 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண். 827, நாள்.07.01.2020ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 19.02.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 7.15 % மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 4.56 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 4.56 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்ப ந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

2. மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.00048/2020/இ1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.905</u>

பொருள் 8 : நகராட்சி நிர்வாக ஆணையரக புதிய கட்டிடம் கட்டுவதற்கு திருத்திய கட்டிட மதிப்பீட்டின் படி ஒவ்வொரு நகராட்சிகளுக்கும் பஙகளிப்பு தொகை நிர்ணயம் செய்தும், மேற்படி பஙகளிப்பு தொகையினை உடனடியாக செலுத்த கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.30322/2012/சி3, நாள் 15.02.2020ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல்நிலை நகராட்சியான அருப்புக்கோட்டை நகராட்சிக்கு நான்காவது தவணையாக ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) பஙகளிப்பு தொகையாக நிர்ணயம் செய்து செலுத்த கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இந்நகராட்சிக்குரிய பஙகளிப்பு தொகை ரூ.3,00,000/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து நகர்புற நிர்வாக கட்டிடம் சஙகத்திற்குரிய கணக்கிற்கு செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.7223/2017/சி1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.906</u>

பொருள் 9 : அருப்புக்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்த பணிகளுக்கான 2019–2020ம் ஆண்டுக்கான GST தொகையை இணையதளம் வாயிலாக (Online) செலுத்த ஆகும் செலவுத் தொகை ரூ.12000/–க்கு கேட்பு சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகையை அண்ணாருக்கு வழஙக மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் ஒப்பபுதல் வழஙகலாம். மேலும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழஙகியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.11240/2017/பி1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.907</u>

பொருள் 10 : அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு C, பிளாக்5, 25, நகரளவு எண்கள் 25/1A1A (Part) 4/2A. 2பி ல் 0.5450 ஏக்கர் (2217.76சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்தக் கோரி திரு.சு.ஜெயபால் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 480/2019 நாள் 09.10.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 891/2020 நாள் 19.02.2020ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.6684/2019/எப்1

<u>தீர்மானம் :</u>

அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.908</u>

பொருள் 11 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு குடிநீர் நிதி 2019–2020 ன் கீழ் நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு வாகனம் TN 67 B 8965 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.46000/– இந்நகர்மன்றத் தீர்மான எண். 865, நாள்.07.02.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 28.02.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/S.மனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ் அருப்புக்கோட்டை | ரூ.46000/– |
| 2. | M/S.ஸ்ரீ பாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் அருப்புக்கோட்டை | ரூ.48000/– |

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைவான விலைக்கு கொடுத்துள்ள M/S.மனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

2. மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.00359/2020/இ2

<u>தீர்மானம் :</u>

அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.909</u>

பொருள் 12 : அருப்புக்கோட்டை நகராட்சி மதுரை ரோடு நீரேற்று நிலையத்தில் மின்தடை காலங்களில் பயன்படுத்தப்படும் 50KVA ஜென்செட்டில் ஏற்பட்டுள்ள பழுது சரிசெய்யும் பணிக்கு ரூ.17811/– மற்றும் அருப்புக்கோட்டிடை நகராட்சிக்கு சொந்தமான தாமிரபரணி நீரேற்று நிலையத்தில் உள்ள 82.5 KVA Genget ல் ஏற்பட்டுள்ள பழுது சரிசெய்யும் பணிக்கு ரூ.19500/– ஆக மொத்தம் ரூ.37311/–யை மேற்படி பணிகளுக்கான செலவினத் தொகையினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1507/2020/இ1

<u>தீர்மானம் :</u>

அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.910</u>

பொருள் 13 : சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் திரு.N.ரவிசங்கர் என்பவரால் தொடரப்பட்ட M.P.(MD) No.4284 of 2020 வழக்கிற்கு நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்த வகைக்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.N.திலீப்குமார் அவர்களுக்கு ரூ.8000/– ஐ வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.877/2016/அ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.911**

பொருள் 14 : அருப்புக்கோட்டை நகராட்சியில் 1948ம் ஆண்டு முதல் 1999ம் ஆண்டு வரை பிறப்பு மற்றும் இறப்பு கணினியில் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது. பிறப்பு பதிவுகள் 99223ம் மற்றும் இறப்பு பதிவுகள் 22650ம் பதிவு செய்யப்படவேண்டியுள்ளது. மேற்கண்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை வெளிநபர்களை கொண்டு கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு உத்தேச மதிப்பாக ரூ.5,00,000/– செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.204/2017/எச்2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.912**

பொருள் 15 : இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சுக்கிலநத்தம் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடஙகில் உள்ள குப்பைகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை செயின்டோசர் வாகனம் மூலம் குப்பைகளை ஒதுக்கும் பணிக்காக 100 மணி நேரத்திற்கு மிகாமல் மேற்கொள்ளவும், மணிக்கு ரூ840/– வீதம் (உதவி செயற்பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை வழஙகிய விகிதத்தின்படி) 100 மணி நேரத்திற்கு ரூ.84000/– செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.7779/2020/எச்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.913**

பொருள் 16 : அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு F, பிளாக் 11, நகரளவு எண்கள் 33/1, 135 மற்றும் 136ல் 3.90 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.T.R.ராம்குமார், திருமதி.T.R.V.பவர்ணா என்பவர்கள் விண்ணப்பித்ததன் பேரில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ந.க.எண்.3850/2019/மம4 நாள் 21.08.2019ல் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் படி மேற்படி வரைபடத்தில் உள்ள சாலைகள், பூஙகா, உள்ளாட்சி உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை ஆவண எண் 152/2020 நாள் 13.01.2020ன் மூலம் நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி சாலையினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4740/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.914**

பொருள் 17 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு குடிநீர் நிதி 2019–2020 ன் கீழ் வார்டு எண் 35 ஞானியர் 1வது, 2வது தெரு மற்றும் சின்னையா முதலியார் தெரு ஆகிய தெருக்களில் குடிநீர் குழாய் (Pipe Line) பதிக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,25,000/– இந்நகர்மன்றத் தீர்மான எண். 854, நாள்.07.01.2020ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 12.03.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 2.77 % மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 0.20 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.20 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஸ்வநாதன், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.00015/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.915**

பொருள் 18 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 16 SBK பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் சிவன்கோவில் சந்திப்பு வரை உள்ள அகலப் பகுதியில் (Widening) TURIP 2017–18 ன் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி போக மீதமுள்ள வடக்கு பகுதியில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1411/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.916**

பொருள் 19 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தில் (Unit : I) ல் உள்ள 30 HP டர்பைன் மின்மோட்டார் பம்பு செட்டிற்கு பதிலாக புதியதாக நீர்மூழ்கி மின்மோட்டார் பம்பு செட் மற்றும் அதற்கான உதிரி பாகங்களுடன் வாங்கி பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.926/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.917**

பொருள் 20 : சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண் 20920/2019ல் சட்டக்கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு சட்டக்கருத்துரு வழங்கியதற்கு திரு.N.திலீப்குமார், வழக்கறிஞர் அவர்களுக்கு செலவினத்தொகை ரூ.1500/– ஐ வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.926/2020/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.918**

பொருள் 21 : அருப்புக்கோட்டை நகராட்சியின் 2020–2021 ஆம் நிதி ஆண்டிற்கான உத்தேச செலவு திட்ட மதிப்பீடு 2019–2020ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு நகர் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.583/2016/பி1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.919**

**பொருள் 22 :** அருப்புக்கோட்டை நகராட்சியின் 2018–2019ம் நிதியாண்டிற்கான கணக்குகள் இணக்கம் செய்து உரிய அறிக்கை தயார் செய்து தணிக்கைக்கு சமர்பித்த வகைக்கு ரூ.35,000/–யை திரு.V.சீனிவாசன் (C.A) அவர்களுக்கு வழஙகவும். மேலும் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.11240/2020/பி2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.920**

**பொருள் 23 :** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு E பிளாக் 3, நகரளவு எண் 2/6 A (PT)ல் 0.52 ஏக்கர் (2104.36 சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172, H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன் படி வரன்முறைப்படுத்த கோரி திரு.M.ஜெயக்குமார் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 54/2019 நாள் 23.01.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 5701/2019, 2556/2014 நாள் 11.11.2019 மற்றும் 02.06.2014ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.690/2019/எப்1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.921**

தனி அலுவலர்

அருப்புக்கோட்டை நகராட்சி